மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.11/2023
அ.வ.எண்.47/2012

1. ராஜேந்திரன் (இறந்துவிட்டார்)
2. அய்யந்துரை
3. ஜெயம்மாள்
4. சுப்ரமணியன்
5. சுசீலா
6. பவுனா
7. மோகன்ராஜ்
8. ராஜேஸ்வரி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. C.மாதையன்
2. M.வெங்கடாசலம்
3. நித்தியா
4. சரத்குமார்
5. மதன் குமார்
6. மைனர் அருண் குமார்
சார்பாக அவரது காப்பாளராக அவரது
தந்தை வெங்கடாசலம்
7. K.முத்து ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 27.03.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.வேல்முருகன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.C.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாகவும், 5, 6ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் திருமதி.G.சுமதி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 5, 6ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையில், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததால் 5ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 32 விதிகள் 11 மற்றும் 12ன் கீழ் 5ம் எதிர்மனுதாரரின் காப்பாளரை நீக்கி, 5ம் எதிர்மனுதாரரை வழக்கில் மேஜராக அறிவித்து உத்தரவிட கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

மனுதாரர்கள்/வாதிகளால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், இவ்வழக்கில் 5ம் எதிர்மனுதாரர் இளவர் என்றும், இவ்வழக்கில் 5ம் எதிர்மனுதாரரின் தந்தையும், இயற்கை காப்பாளருமான 2ம் பிரதிவாதியே 5ம் எதிர்மனுதாரரின் பாதுகாவலராக இந்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டிருந்தார் என்றும், தற்போது 5ம் எதிர்மனுதாரர் உரிமை வயதை அடைந்துவிட்டதால் அவரையும், உரிமை வயதை அடைந்தவர் என விளம்புகை செய்யக் கோரியும், அவரது பாதுகாவலரை நீக்க கோரியும் உத்தரவிட கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனு பொய்யானது. மோசடியானது, சட்ட வலிவற்றது. 1ம் எதிர்மனுதாரரை ஏமாற்றும் நோக்கத்துடன் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றாகும். இம்மனுவில் மைனராக இருந்து மேஜர் நிலை அடைந்த எதிர்மனுதாருக்கு உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை 32 விதி 12 மனுவில் மற்றும் Retirement of Guardian (or) Removal of Guardian மனுவிலேயே படிமெமோ மனுதாரர்கள் செலுத்தி உரிய அறிவிப்பு வழங்க வேண்டும் என்ற சட்டநிலைப்பாட்டை பின்பற்றாத மனுதாரர்களின் இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமன 1ம் எதிர்மனுதாரர் கோரியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு விசாரணையின்

போது மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/வாதிகளால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், இவ்வழக்கில் 5ம் எதிர்மனுதாரர் இளவர் என்றும், இவ்வழக்கில் 5ம் எதிர்மனுதாரரின் தந்தையும், இயற்கை காப்பாளருமான 2ம் பிரதிவாதியே 5ம் எதிர்மனுதாரரின் பாதுகாவலராக இந்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டிருந்தார் என்றும், தற்போது 5ம் எதிர்மனுதாரர் உரிமை வயதை அடைந்துவிட்டதால் அவரையும், உரிமை வயதை அடைந்தவர் என விளம்புகை செய்யக் கோரியும், அவரது பாதுகாவலரை நீக்க கோரியும் உத்தரவிட கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரரை ஏமாற்றும் நோக்கத்துடன் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஒன்று என்றும், இம்மனுவில் மைனராக இருந்து மேஜர் நிலை அடைந்த எதிர்மனுதாரருக்கு உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை 32 விதி 12 மனுவில் மற்றும் Retirement of Guardian (or) Removal of Guardian மனுவிலேயே படிமெமோ மனுதாரர்கள் செலுத்தி உரிய அறிவிப்பு வழங்க வேண்டும் என்ற சட்டநிலைப்பாட்டை பின்பற்றாத மனுதாரர்களின் இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறியுள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்கையில் மனுதாரர்கள்/வாதிகளால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கில் இளவரான 5ம் எதிர்மனுதாரர் உரிமை வயதை

அடைந்துவிட்டதால் அவரது பாதுகாவலரான 2ம் பிரதிவாதியை நீக்கவும், 5ம் எதிர்மனுதாரரை உரிமை வயதை அடைந்தவர் என விளம்புகை செய்ய கோரியும், மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) இந்நிலையில் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், 5ம் எதிர்மனுதாரரின் தந்தையும் அவரது பாதுகாவலருமான 2ம் பிரதிவாதி கடந்த 05.10.2012ம் தேதியில் தோன்றாதரப்பினராக்கப்பட்டு, அவருக்கு பதிலாக 5ம் எதிர்மனுதாரரின் பாதுகாவலராக நீதிமன்ற காப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. தற்போது இம்மனுவில் 5ம் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, முன்னாள் இளவரான 5ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக்கப்பட்டு உள்ளார். இந்நிலையில் உ.வி.மு.ச. கட்டளை 32 விதி 12(5)ல், *"Any application under this rule may be made exparte: but no order discharging a next friend and permitting a minor plaintiff to proceed in his own name shall be made without notice to the next friend."* என தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(v) மேற்கண்ட சட்ட வாசகத்தை கருத்தில் கொள்கையில், இளவரின் பாதுகாவலருக்கு அறிவிப்பு அளிக்காமல் மேற்படி பாதுகாவலரை நீக்க இயலாது என்பது தெளிவாகிறது. இந்நிலையில் 5ம் எதிர்மனுதாரர் இளவராக இருந்தபோது நியமிக்கப்பட்டிருந்த நீதிமன்ற காப்பாளருக்கு அறிவிப்பு அளிக்கப்பட்டு, அவரால் "எதிருரை இல்லை" என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் இவ்வழக்கின் சங்கதி மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொள்கையிலும், இளவரான 5ம் எதிர்மனுதாரர் உரிமை வயதை அடைந்துவிட்டார் என்ற சங்கதி எதிர்மனுதாரர்களாலேயே நீதிமன்றத்திற்கு குறிப்பாணையின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையிலும், இவ்வழக்கில் 5ம் எதிர்மனுதாரருக்கு நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டிருந்த நீதிமன்ற பாதுகாவலரை நீக்கம் செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.04.22 15:57:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.04.22 15:58:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.